# ஆத்திசூடி

- ஔவையார்

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புரவு ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. அஃகம் சுருக்கேல்

1. **அறம் செய விரும்பு**

நன்மை தரக்கூடிய நற்செயல்களை விரும்பிச் செய்ய வேண்டும்.

2. **ஆறுவது சினம்**

கோபம் என்னும் தீயகுணம் வருவதை தணிப்பதும், தவிர்ப்பதும் நன்று.

3. **இயல்வது கரவேல்**

நம்மால் இயன்ற உதவிகளை மறுக்காமல், பிறருக்கு செய்ய முற்பட வேண்டும்.

4. **ஈவது விலக்கேல்**

பிறருக்கு தானம் கொடுத்து, உதவுவதை தடுக்கக் கூடாது.

## 5. உடையது விளம்பேல்

தன்னிடம் இருக்கும் பொருட்களை பற்றி, பிறரிடம் கூறுவதை தவிர்த்தல் நன்று.

## 6. ஊக்கமது கைவிடேல்

செய்யும் செயல்களை, சோர்வு அடையாத வகையில், ஊக்கத்துடன் செய்ய வேண்டும்.

## 7. எண் எழுத்து இகழேல்

செல்வங்களுள் எல்லாம் சிறந்தசெல்வமான கல்விச்செல்வத்தை அலட்சியப்படுத்தக் கூடாது.

## 8. ஏற்பது இகழ்ச்சி

ஒருவரிடம் சென்று இரப்பது (யாசிப்பது) இழிவான செயலாகும்.

**9. ஐயம் இட்டு உண்.**

நாம் உண்ணும் போது, பிறருக்கு பகிர்ந்து கொடுத்து உண்ண வேண்டும்.

**10. ஒப்புரவு ஒழுகு.**

உலகம் செல்லும் பாதையை நோக்கி, அதே வழியில் நாமும் செல்ல வேண்டும்.

**11. ஓதுவது ஒழியேல்.**

அறிவினை பெருகச் செய்யும் நூல்கள் வாசிப்பதை விட்டுவிடக் கூடாது.

**12. ஔவியம் பேசேல்**

பிறர் பொறாமைப்படக் கூடிய வார்த்தைகளை எப்பொழுதும் பேசக் கூடாது.

**13. அஃகம் சுருக்கேல்.**

தானியத்தை கொடுக்கும் போது, குறைவின்றிக் கொடுக்க வேண்டும்.

## வினாக்கள் :-

1. ஆத்திசூடியை எழுதியவர் யார்?

2. உனக்கு தெரிந்த இரண்டு ஆத்திசூடி அடிகளைக் கூறுக.

3. அறம் செய விரும்பு - என்ற ஆத்திசூடி பாடலடியில் அமைந்த “அறம்” என்ற சொல்லிற்கு பொருள் தருக.

4. ஈவது விலக்கேல் - என்ற ஆத்திசூடி பாடலடிக்கு விளக்கம் தருக.

5. ஆறுவது சினம் - என்ற ஆத்திசூடி பாடலடியில் "சினம்" என்ற சொல்லிற்கு பொருள் தருக.